தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்–637 002

மலர்–5 | மடல்–1

# செய்தி மடல்

ஏப்ரல்–ஜுன் 2020

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் **நி.கு.சுதீப்குமார்**
இயக்குநர்
விரிவாக்கக் கல்வி இயக்குநர்

**ஆசிரியர்**
முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**
முனைவர் **பெ. முருகன்**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
(உழவியல்)

**ஆசிரியர் குழு**
முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர். **டி. ஹரிஹரன்**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **சு. சத்யா**
முனைவர் **மா. டெய்சி**

## கோவிட் – 19 தடை காலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள்

### பாதுகாப்பு முன்னெச்சரிக்கை



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் விவசாயிகள் மற்றும் அலுவலர்களின் பாதுகாப்பு நலன் கருதி சென்சார் மூலம் இயங்கும் தானியங்கி சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் திரவ சோப்பு ஆகியவை முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. நிலையத்திற்கு வரும் அனைவரும் தாங்கள் கைகளை தூய்மைப்படுத்திய பின்னரே அலுவலகத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் நிலையத்திற்கு வரும் அனைவரையும் தெர்மல் ஸ்கேனர் கருவி மூலம் உடல் வெப்பநிலை பரிசோதித்து, வாகனங்களுக்கும கிருமிநாசினி கரைசல் தெளித்த பின்னரே அனுமதிக்கப்படுகிறார்கள். வேளாண்மை அறிவியல் நிலையத்தில முகப்பு சுவரில் கோவிட்-19 வைரசால் ஏற்படும் தீமைகள், பாதுகாப்பு வழிமுறைகள் பற்றி விரிவாக சுவரொட்டி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பண்ணை வேலையாட்கள் அனைவருக்கும் முககவசம் கொடுக்கப்பட்டு சமூக இடைவெளியுடன் (5-6 அடி) வேலைசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் வாரம் ஒரு முறை 2.5சதம் லைசால் மற்றும் 1 சதம் சோடியம் ஹைப்போகுளோரைடு கொண்டு நிலைய கட்டிடம் மற்றும் வாகனங்கள் மற்றும் விவசாயிகள் வரும் இடங்களை சுத்தம் செய்யப்பட்டு, கோவிட்-19 வைரஸ் வராமல் பாதுகாக்கப்படுகிறது.

### விவசாயிகளுக்கு இடுப்பொருட்கள்



நாமக்கல் வேளாணமை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான 86 வகையான வேளாண் இடுப்பொருட்கள் எளிதில் கிடைக்கும் வகையில் “வேளாண் தொழில்நுட்ப இடுப்பொருட்கள் விற்பனை மையம்” வருடம் முழுவதும் இயங்கி வருகிறது. பொதுவாக இம்மையத்தியத்தில் நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி இதர மாவட்டங்களிலிருந்தும் வருகை புரிந்து இடுப்பொருட்கள் வாங்கி பயனடைந்து வருகிறார்கள். குறிப்பாக தடைகாலத்தில் 1125 விவசாயிகள் வேளாணமைம் அறிவியல் நிலையத்திற்கு வருகை புரிந்து கீழ்கண்ட வேளாண் மற்றும் கால்நடை இடுப்பொருட்களை வாங்கி பயன்டைந்துள்ளார்கள்.

| இடுப்பொருட்களின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட அளவு (கிலோ / எண்) | இடுப்பொருட்களின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட அளவு (கிலோ / எண்) |
|---|---|---|---|
| **விதைகள் மற்றும் நடவு செடிகள்** | | **கால்நடை கோழி மற்றும் மீன்** | |
| தீவன விதைகள் | 3999 கிலோ | கோழி குஞ்சுகள் | 1243 எண் |
| ஆமணுக்கு விதை | 625 கிலோ | ஆடுகள் | - |
| காய்கறி விதைகள் | 32.5 கிலோ | தாது உப்பு கலவை | 150 கிலோ |
| பழக்கன்றுகள் | 325 எண் | தாது உப்பு கட்டி | 148 எண் |
| தென்னை நாற்றுகள் | 850 எண் | அசோலா | 350 கிலோ |
| கோ-4 கரணைகள் | 550 எண் | மீன் குஞ்சுகள் | 38 லட்சம் |
| **உயிரிபொருட்கள்** | | **இதர பொருட்கள்** | |
| சூடோமோனாஸ் | 124 கிலோ | தென்னை டானிக் | - |
| ட்ரைகோடெர்மா | 98 கிலோ | வேப்பம் எண்ணெய் | 55 லிட்டர் |
| மண்புழு உரம் | 925 கிலோ | புங்கம் எண்ணெய் | 42 லிட்டர் |
| வேர் உட்பூசனம் | 10 கிலோ | பயிர், ஊட்டச்சத்து கலவை | 56 கிலோ |
| அசோஸ்பைரில்லம் | 113 கிலோ | இனக்கவர்ச்சி பொறிகள் | 98 எண் |
| பாஸ்போபாக்டீரியா | 99 கிலோ | ஊட்டமேற்றியமட்கு உரம் | 41 கிலோ |
| திரவ மெத்திலோ பாக்டீரியா | 1லிட்டர் | நுண்ணூட்ட கலவை | 270 கிலோ |
| வேஸ்ட்டிகம்போசர்(கழிவு சிதைவு) | 76 எண் | | |







## விவசாயிகளுக்கு ஆலோசனைகள்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் தங்கு தடையின்றி கிடைக்க, நேரிடையாகவும், தொலைபேசி, கைபேசி, வாட்ஸ்அப், விவசாய இணைய முகப்பு (எம்.கிசான்போர்டல்), முகநூல், தின நாளிதழ் மற்றும் வயல் பார்வையிடல் மூலமாகவும் வழங்கப்பட்டுவருகிறது. கோவிட்-19 தடைகாலத்தில் வேளாண் அறிவியல் நிலையத்தின் சேவைகள் 4369 விவசாயிகளுக்கு வாட்ஸ்அப் குழு மூலமாகவும், 164268 விவசாயிகளுக்கு விவசாய இணைய முகப்பு மூலமாகவும், 1563 விவசாயிகளுக்கு தொலைபேசி வாயிலாகவும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, 1655 விவசாயிகள் நேரில் வருகைபுரிந்து தங்களுக்கு தேவையான சேவைகளை பெற்றுள்ளனர். மேலும் இத்தடைகாலத்தில் 142 விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உரிய தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு, 8 தொழில்நுட்பங்கள் தின நாளிதழில் பிரசுரிக்கப்பட்டு, 4 வானொலி உரைகள் திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானொலி நிலையம் வழியாக வழங்கப்பட்டு, விவசாயிகள் உரிய நேரத்தில் பண்ணை வேலைகளை தொடர்ந்து மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

## விவசாயிகளுக்கு விற்பனை வாய்ப்பு



கோவிட்-19 தடை காலத்தில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்ய் முடியாமல் இருந்த சமயத்தில், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், விவசாயிகளிடமிருந்து 2210 கிலோ நிலக்கடலை விதை, 561 கிலோ சோளம், 17250 கிலோ தீவன விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்குரிய தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறுவடை செய்யப்பட்ட 3டன் மீன்கள் மற்றும் 760கிலோ இறால் திருச்சி சந்தையில் விற்பனை செய்ய, இ-பாஸ் வாங்கி கொடுத்து உரிய நேரத்தில் விற்பனை செய்ய ஏற்பாடும் செய்யப்பட்டது. மேலும் திறன் வளர்க்கும் பயிற்சியில் பங்கு பெற்ற விவசாயிகள் தங்களுக்கு தேவையான உயிரி இடுப்பொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தகரைசல், மீன் அமிலம் நூண்ணுட்ட கரைசல் மற்றம் மண்புழு குளியல் நீர், உற்பத்தி செய்யப்பட்டு தாங்கள் பயிர்களுக்கு கொடுத்து, பூச்சி மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கபட்டுள்ளது.

## ஆரோக்கிய சேது கைபேசி செயலி 2020




இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் அறிவுரையின்படி நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம். விவசாயிகளுக்கு ஆரோக்கிய சேது கைபேசி செயலியை அறிமுகம் செய்து, செயலியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து, அனைத்து விவசாயிகளும் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்தும் படி அறிவுறுதப்பட்டுள்ளது. அந்த வகையில் வேளாண் அறிவியல் நிலைய அலுவலகள் மற்றும் 6415 விவசாயிகளுக்கு வாட்ஸ்அப் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, 1325 விவசாயிகள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகிறார்கள்.

## நிக்ரா திட்ட கிராமத்தில் கோழிகளுக்கு தடுப்பூசி



நிக்ரா திட்டத்தொகுப்பு கிராமமான ஜம்புமடை கிராமத்தில் புறக்கடை கோழி வளர்க்கும் பண்ணையில் உள்ள நாட்டு கோழிகளுக்கு ராணிகெட் நோய் வராமல் தடுப்பதற்கான தடுப்பூசி 28.04.2020 அன்று போடப்பட்டது. இம்முகாமில் 860 கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு, 53 புறக்கடை கோழி வளர்கும் பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## பின் தங்கிய குடும்பங்களுக்கு உதவி



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பங்கு தொகையாக ரு. 56000 சேகரித்து, கோவிட்-19 வைரஸ் தடை காலத்தில் அருகில் உள்ள கிராமத்தில் சிரமப்பட்ட 36 பின்தங்கிய குடும்பங்கள், முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளி குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் முட்டைகள் ஆகியவை 29.04.2020 அன்று வழங்கப்பட்டுள்ளது.

## மண் மற்றும் நீர் பரிசோதனை

கொரோனா தடை காலத்தில் 59 மண் மாதிரிகள் மற்றும் 36 நீர் மாதிரிகள் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டு, பரிசோதனை செய்து, மண் மற்றும் நீர் வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளுக்கு பரிசோதனை அடிப்படையில், மண் வள மேம்பாட்டிற்கான ஆலோசானைகள் வழங்கப்பட்டுள்ளது.

## உலக தேனீக்கள் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் தேனீக்கள் வளர்க்கும் விவசாயியான அணியாபுரம் கிராமத்தில் உலக தேனீக்கள் தினம் 20.05.2020 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தேனீக்களின் முக்கியத்துவம், தேனின் மருத்துவ குணங்கள், தேனீ வளர்க்கும் முறைகள் மற்றும் தேனீ பிரித்தெடுக்கும் முறைகள் பற்றி 21 விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு, 305 விவசாயிகள் வாட்ஸ்அப் மூலம் பயன்பெற்றனர்.

## உலக பால் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு உலக பால் தினம் நிகழ்ச்சி 01.06.2020 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கோவிட்-19 தடை காலத்தில் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை, தூய பால் உற்பத்தி மற்றும் பால் மதிப்பூட்டும் தொழில்நுட்பங்கள் பற்றி 15 விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

## உலக சுற்றுசூழல் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அலுவலர்கள் மற்றும் பண்ணை வேலையாட்கள் மூலம் உலக சுற்றுச்சூழல் தினம் 05.06.2020 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அனைத்து அலுவலர்களும் தலா இரண்டு மரகன்றுகள் வீதம் மொத்த 30 கன்றுகள் நடவு செய்யபட்டு இந்நிலையத்தை தூய்மையாகவும், பசுமையாகவும் வைத்திருக்க உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## கண்டறியும் வயல் பார்வை



நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிபேட்டை வட்டாரத்தில் மரவள்ளியில் அதிகபடியான ஒரு வகையான மாவுப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டது. இதனை கண்டறிய தமிழக அரசின் வேளாண் உற்பத்தி ஆணையர் தலைமையில், தோட்டக்கலை இயக்குநர், மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தின் தோட்டக்கலை கல்லூரியின் முதல்வர், விஞ்ஞானிகள், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், வேளாண் இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்கள் கல்குறிச்சி கிராமத்தில் 29.05.2020 மற்றும் 02.06.2020 அன்று வயல் பார்வைகள் மேற்கொண்டனர். பார்வையின் முடிவில் அதிகபடியான மாவுபூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த மேலாண்மை முறைகளை விவசாயிகளின் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டது.

## பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்



இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் நிதியுதவியுடன் நாமக்கல வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் கொல்லிமலையில் உள்ள குண்டூர்நாடு மற்றும் வாழவந்திநாடு கிராமத்தில் பழங்குடியினா் மேம்பாட்டுத்திட்டம் ரூ. 12 இலட்சம் செலவில் 2020-21 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் மூலம் குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கான குழுகூட்டம் நடத்தப்பட்டு, விவசாயிகளின் வாரியாக அடிப்டை கணக்கெடுப்பு 10.06.2020 மற்றும் 18.06.2020 அன்று தாம்பப்பாடிபட்டி, பள்ளிக்காடு, இலங்கியம்பட்டி மற்றும் கூச்சகிராய்ப்பட்டி கிராமங்களில் நடத்தப்பட்டது. மேலும் முதல் நிலை செயல்விளக்கம் மூலம் சாமை(எ.டி.எல்.-1), கேழ்வரகு ( கோ-15, கே.எம். ஆர் 204 ) இரக விதைகள், உயிரி பொருட்கள் , நுண்ணூட்ட உரம் மற்றும் மண்புழு உரம் ஆகியவை தாம்பபாடிபட்டி இலங்கியம்பட்டி கிரமத்தில் உள்ள 40 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, வயல்வெளி பார்வையும் 29.06.20 அன்று மேற்கொளள்ப்பட்டது. மேலும் மிளகு பயிரில் காபி வெட்டுகிளி பூச்சிகளின் தாக்கம் ஏற்பட்டதால், பல்கலைகழக விஞ்ஞானிகள் 17.06.2020 அன்று வாழவந்திநாடு கிராமத்தில் மிளகு வயலை பார்வையிட்டு தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



## பாரம்பரிய இயற்கை வேளாண் திட்டம்




பாரம்பரிய இயற்கை வேளாண்த்திட்டம் கொல்லிமலையில் உள்ள இலங்கியம்பட்டி கிராமத்தில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் மூலம் மாசிலா இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் குழு துவங்கப்பட்டு மிளகு, ஏலக்காய், மலைவாழை, சாகுபடி, மண்புழு உரம் உற்பத்தி. தேனீவளர்ப்பு நடைபெற்று கொண்டு இருக்கிறது. மேலும் இத்திட்டத்தில் மிளகு பிரித்தெடுக்கும் இயந்திரம், மண்புழு உரம் தயாரிக்க தொட்டி அமைத்தல் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கி செயல்பட்டு கொண்டு இருக்கிறது. மேலும் குழுவில் உள்ள விவசாயிகளுக்கு PGS இந்தியா இயற்கை முறையில் பயிர் உற்பத்தியாளர்கள் சான்றிதழ் 26.06.2020 அன்று பெறப்பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலை துணை இயக்குநர் தலைமையில் வயல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 2 குழுகூட்டம் நடத்தப்பட்டு, ஒரு வெளியீட பயிற்சியும் 15.05.2020, 26.05.2020, 18.06.2020 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

## அட்மா திட்டம் செயல்பாடுகள்



இராசிபுரம் மற்றும் வெண்ணந்தூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் மூலம் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய வல்லுநர்களால், பயறுவகை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சியும், பண்ணைப்பள்ளியும், குறுக்குபுறம் மற்றும் அக்கரைப்பட்டி கிராமத்தில் 22.06.2020, 26.06.020 அன்று நடத்தப்பட்டது இந்நிகழ்ச்சியில் உளுந்து மற்றும் பாசிப்பயறு உற்பத்தி முறைகள், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் மற்றும் விதை நேர்த்தி, இனக்கவர்ச்சி பொறி செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 60 பயறு சாகுபடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## வலைதள கருத்தரங்கு (நிகழ்நிலை)






நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்கான் வலைதள கருத்தரங்கு "நீடித்த வேளாண்மைக்கு நிலையான ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் "கால்நடைகளுக்காக தீவன மேலாண்மை மற்றும் பசுந்தீவன சாகுபடி முறைகள்" என்ற தலைப்பில் 19.06.20, 27.06.20 அன்று செயலி (zoom) மூலம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்டம் மற்றும் இதர மாவட்டத்தைச் சேர்ந்த 87 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இக்கருத்தரங்கில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் ஆமணுக்கு சாகுபடி, முறையில் மரவள்ளியில் உள்ள பிரச்சனை மற்றும் தீர்வுகள், நுண்ணூட்டசத்து மேலாண்மை முறைகள், கறவைமாடு, ஆடு வளர்ப்பு, நாட்டு கோழி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, அசோலா உற்பத்தி, மண்புழு உரம் உற்பத்தி ,தீவன மேலாண்மை, பசுந்தீவன உற்பத்தி, நன்னீரில் மீன் வளர்ப்பு, என்ற தலைப்பில் தொழில்நுட்ப உரைகள் வழங்கப்பட்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட்டது.

## வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப தாக்கம்

தொடர்ந்து பண்ணை ஆலோசனைகள் வழங்கியதில், கீழ்கண்ட விவசாயி அக்டோபர் 2019 முதல் ஜனவரி 2020 வரை முறையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதலை கட்டுபடுத்தி வெற்றி கண்டுள்ளார்.

**விவசாயி பின்னனி:**

பெயர்: திருமதி. எஸ். பத்மினி, கிராமம்: மரக்காடு, வட்டாரம் : மோகனூர்

பயிர்: வீரிய ஒட்டு மக்காச்சோளம், இரகம்: NK6240, பரப்பளவு : 2.5 ஏக்கர்

**பிரச்சனைகள்:**

- பெவேரியாவுடன் விதை நேர்த்தி செய்யாதது
- விதைத்த 12 ஆம் நாளில் அதிகளவு படைப்புழுவின் தாக்கம் (42.4%)
- அதிகளவு பூச்சி கொல்லி மருந்துகள் தெளித்தது
- இளம்பயிர் பருவத்தில் மருந்து செலவுகளுக்காக அதிகளவு பணம் செலவழித்தல் ரூ.7650 / எக்டர்

**கே.வி.கே வின் தலையீடு:**

- விதைத்த 13 நாள் கண்டறியும் வயல் பார்வையிட்டது
- இடுப்பொருட்கள் வழங்கியது (பெவேரியா, மெட்டாரைசிம், எமாமெக்டின், குளோரன்டிரனிலிபுரோல்)
- 20 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து வயலை பார்வையிட்டது
- படைப்புழுவின் தாக்குதல் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றி விழிப்புணர்வு கொடுத்தது தொடர்நது தொலைபேசி வாயிலாக ஆலோசனைகள் வழங்கியது.

**தொழில்நுட்ப தலையீடு:**

- பயிர்கள் நெருக்கி இருப்பதை தவிர்கக பயிர் களைதல்
- 15 மற்றும் 35 நாட்களில் களை எடுத்தல்
- வேப்பம் கொட்டை கரைசலை உரநீர் பாசனம் மூலம் 20 வது நாள் கொடுத்தல்
- படைப்புழுக்களின் முட்டை குவியல்களை சேகரித்து அழித்தல்
- 15ஆம் நாள் அசாடிராக்டின் 1000 பிபிஎம் (2மில்லி லிட்டர் / நீர்) கரைசல்
- 23 ஆம் நாள் பேவேரியா (5 கிராம் லிட்டர் / நீர்) கரைசல் தெளித்தல்
- 30 வது நாள் எமாமெக்டின் (0.4 கிராம் / லிட்டர் நீர்) பூச்சிகொல்லி மருந்து தெளித்தல்
- 37 வது நாள் குளோரன்டிரனிலிபுரோல் (0.5 மில்லி / லிட்டர் நீர்) பூச்சி கொல்லி மருந்து தெளித்தல்.

**தாக்கம்:**

பயிரின் 18 வது நாள் முதல் 80 நாள் வரை படைப்புழுவின் தாக்குதல் 100 சதம் கட்டுக்குள் வைத்திருந்தது

- அதிக தானிய மகசூல் - 7125 கிலோ / எக்டர்
- மொத்த வருமானம் - ரூ. 171000 / எக்டர்
- உற்பத்தி செலவு - ரூ. 65500 / எக்டர்
- நிகர வருமானம் - ரூ. 105500 / எக்டர்
- வரவு செலவு விகிதம் - ரூ. 2.61.









## விவசாயியின் விருது

நாமக்கல் மாவட்டத்தில் புதுச்சத்திரம் வட்டாரத்தில் உள்ள நொச்சிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் திரு. ப. ஸ்டாலின் அவர்கள் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொகுப்பு முதல் நிலை செயல்விளக்கம் திட்டம் மூலம் பாசிப்பயறு சாகுபடி செய்துள்ளார். தனது வயலில் 2 ஏக்கர் நிலப்பரப்பில் பாசிப்பயறு (கோ-8) இராகத்தை 2019-20 ஆண்டு சாகுபடி செய்ததில், அதிக மகசூலாக ஒரு எக்டருக்கு 1425 கிலோ எடுத்து மாநில அளவில் பயிறு சாகுபடிக்கான இரண்டாம் பரிசு பண விருது (ரூ. 10000) மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.




**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

முதுநிலை விஞ்ஞானி மற்றும்
பேராசிரியர் & தலைவர்

ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002

தொலைபேசி : 04286 - 266650, 266345

மின்னஞ்சல் : kvk.namakkal2004@gmail.com

வலைதளம் : www.kvknamakkal.com